


19.07.2015 அன்று தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வள்ளலாரின் வாழ்வியல் சிந்தனைகள் என்னும் தலைப்பில் உரையாற்றிய முனைவர் ப. பானுமதி, தலைவர் புலவர் த. இராமலிங்கம், செயலாளர் துரை. சுந்தரராஜலு



தமிழ்த்தாய் வாழ்த்து பாடிய அமெரிக்க மாணவன் பிரணவ், சம்கீதா, உடன் இருப்போர் முனைவர் ப. பானுமதி, புவவர். த. இராமலிங்கம், துரை. சுந்தரராஜலு



வள்ளலார் குறித்து இனிமையாகப் பாடிய முகில் மயூரி- உடன் த. இராமலிங்கம், துரை. சுந்ததராஜலு, ந. அதியமானி ஆகியோர்.

அண்ணாநகர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 19.07.2015 அன்று சங்கத் தலைவர் புலவர் த. இராலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. முன்னதாக அமெரிக்காவிலிருந்து வந்த மாணவன் பிரணவ் மற்றும் சம்கீதா ஆகிய குழந்தைகள் அழகு தமிழில் தமிழ்த்தாய் வாழ்த்தினை சிறப்பாகப் பாடினர். அடுத்து முகில் மயூரி என்ற மாணவி வள்ளலார் குறித்து இரு பாடல்களை தனது அற்புதமான குரலில் பாடி அவையோரை மகிழ்வித்தார். செயலாளர் தனது வரவேற்புரையில் அண்மையில் உடல் நலக்குறைவால் மறைந்த செயற்குழு உறுப்பினர் இரா. செயகுமார் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் தலைவர் தலைமையுரையில் வள்ளலாரைப் பற்றி சிறப்பானதொரு உரையாற்றி சிறப்பு விருந்தினர் முனைவர் பானுமதி அவர்களை அறிமுகம் செய்து அவருடைய சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார். பின்னர் சிறப்பு விருந்தினரும், வள்ளியம்மாள் பெண்கள் கல்லூரி தமிழ்ப் பேராசிரியருமான முனைவர் பானுமதி அவர்கள் வள்ளலாரின் பல்வேறு குணங்களைப் பற்றி தெளிவாக கூறி, அவருடைய கொள்கையான பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பதைக் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் கூறி, அவரது எளிமை, உணவுப் பழக்கம் போன்றகைளைத் தெளிவாக கூறினார். நிறைவாக உறுப்பினர்கள் எழுப்பிய அனைத்து வினாக்களுக்கும் விளக்கத்தை அளித்தார். பின்னர் செயலாளர் நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.